ஆணி படுக்கை மீது படுப்பது, சாட்டையால் அடித்துக் கொள்வது, பட்டினி கிடப்பதுபோன்ற கொடூரமான பழக்கங்கள் குழவி ஆத்மாவுக்குத் தேவை.

பண்பானசொரணை, ஆன்மீகச் சொரணை, மனத்தில், உணர்ச்சியில் சொரணை ஆகியவை மனிதரின் தரத்தைக் குறிக்கிறது.

வெட்கம், வெட்கமில்லாதவன், வெட்கங்கெட்டவன்என்பது, அவமானத்தை உணராத அற்புதமான ஆத்மாக்களை ‘‘மானம் கெட்டவன்’’ என்கிறோம். அவர்கள் ‘‘புனித ஆத்மாக்கள்’’.

இதை 1 முதல் 10 வரை அளவுகோலாக எழுதி மனிதர்களைப் பிரித்தால் நமது அறிவு அதிகமாகும்.

காலின்ஸுக்கு வெட்கமில்லை.

விக்காமுக்கு வெட்கமில்லை.

இரண்டும் வேறு வேறு வகைகள்.



டார்சி எலிசபெத்திற்காக வெட்கத்தைவிட்டு லிடியாவைத் தேடி, விக்காம் உடன் பேரம் பேசி காரியத்தை முடிக்கிறான். அது ஒரு வகை.

மிஸஸ் பென்னட் இப்பவும் Red Coatஐப் பார்த்தால் எனக்கு நெஞ்சு பதைக்கிறதுஎன்பது வேறு வகையாக வெட்கம் கெட்ட நிலை.

மிஸஸ் பென்னட் பெண்கள் எவரும் ஏற்க முடியாத காலின்ஸை ஷார்லோட் விரும்பி ஏற்பது அவள் நிலை.

அந்த வகையில் அளவுக்கு மிஸஸ் பென்னட் குழந்தைகட்கு உரிய வெட்கமில்லை.

லஜ்ஜைஎன்பது வேறு.

நல்ல மனம், கெட்ட எண்ணம், பெருந்தன்மை, பொறுமை போன்ற குணங்களை 1 முதல் 10என எழுதி நமக்குத் தெரிந்த பழக்கங்களை வரிசைப்படுத்தினால் அறிவு, மனம், உணர்வு, ஆத்மா வளரும்.

உறவினர், மானேஜர், குரு, தலைவர், நண்பர் ஆகியவர் வெட்கத்தைவிட்டுப் பழகும் நேரத்தைக் கண்டோம்.

அவர்கள் எல்லாம் ஒரே தரத்தைச் சார்ந்தவர்கள். மாறிய தரமானாலும் ரகம் ஒன்றே.

துரோகம் செய்வது, ஏமாற்றுவது, பொய் சொல்வது ஆகியவை ஓர் அளவுகோலைச் சேரும்.

துரோகம் செய்த நண்பரை என்னுடன் ஒரு பர்லாங் நடக்க வைத்தார் அன்னை.

பார்ட்னர் கேஸ் போட்டவரை அவர் சரக்கை விற்றுக் கொடுக்கும்படிக் கேட்க வைத்தார்.

உயிரை எடுத்து, நூறு வகைகளில் துரோகம் செய்த குருவை நாம் நண்பர்கள்எனச் சொல்ல வைத்தார்.

அமெரிக்கர் ஏராளமான பலன் பெற்றவர் மட்டமாகப் பேசினர்.

போர் முதலியாரை - 30 வருஷ வருமானம் பெற்றபின் - விறைப்பாகப் பேச வைத்தார்.

இவற்றிலெல்லாம் அன்பருக்குரிய முக்கியத்துவம் உண்டு. அதை அன்பர் காண வேண்டும்.

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தோல்வியின் காரணத்தைப் புற நிகழ்ச்சிகளில் காண்பது தன்னைத் திருத்த மறுப்பதாகும்.

***புறத்தைக் கருதினால் அகம் இருளும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

''உலகத்துடன் ஒன்றி ஆனந்தம் பெறுவது மனிதனுக்கு ஆன்மாவில் ஜடத்தை ஆளும் திறனையளிக்கும்'' என்கிறார் பகவான்.

இதையே வாழ்வில் பொருத்திப் பார்க்கலாம்.

தன் சூழ்நிலையைப் பூரணமாக அறிந்து, அதனுடன் ஒன்றிப்போக முடிந்தால் மனிதனுக்கு அச்சூழ்நிலை கட்டுப்படும். (i.e. பணம் அவனை நோக்கி வரும்; மார்க்கட் அவனை நாடும்; எல்லாச்செயல்களும் பூரணச் செயல்களாகும், வெற்றியைமட்டும் தருவனவாகும்).

***தானறியும் சூழ்நிலை தனக்குக் கட்டுப்படும்.***



# அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே!*
*ஸ்ரீ அரவிந்தாயா நம:*
*ஸ்ரீ அன்னையே சரணம்:*

ஸ்ரீ அன்னைக்கு என் நன்றிகளும், நமஸ்காரங்களும்.

மார்ச் 12ஆம் தேதி ஒரு போன்கால் வந்தது; தம்பி பேசினான். குரல் மிகவும் படபடப்பாக இருந்தது. ''எனக்கு முடியவில்லை. உடலெல்லாம் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை'' எனவும், ''இடதுகால் செயலே இல்லை'' எனவும் உடனிருந்தவரும் அவனுமாய் விஷயம் சொல்ல, தெரியவந்தது. நான் மிகவும் கலக்கமடைந்து அன்னையை அழைத்தேன்.

என் உறவினர் மூலமாக அவனை ஓர் ஹாஸ்பிடலில் இருந்து மற்றொரு நல்ல மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தனர். அவனது இடக் கால் சற்றும் அசைவின்றி நடப்பது ஒரு காலில் நொண்டியபடி நடக்க வேண்டியதானது. அந்த டாக்டர்கள் யோசித்துவிட்டு Doppler Scan செய்ய சொன்னார்கள். அந்த ரிப்போர்ட்டை நான் மாம்பலம் தியான மையத்தில் அன்னை பாதத்தில் வைத்து வணங்கிவிட்டு வந்து டாக்டரிடம் கொடுத்தோம்.

டாக்டர்கள் பார்த்துவிட்டு, அவனுக்கு ரத்தக்குழாயில் அடைப்பு இருக்கிறது. எனவே காலில் அதை நீக்குவதற்கு Vascular Surgery செய்ய வேண்டுமெனச் சொன்னார்கள். மேலும் செலவும் அதிகமாக ஆகும்என்றார்கள். சரி, அங்கிருக்கும் உறவினர்களுக்கு நாம் இருந்தால் தொந்தரவாக இருக்கும்என அவர்களிடம், நாங்கள் வேலூரில் பார்த்துக்கொள்வதாகச் சொல்லிவிட்டு, 4 நாட்கள் கழித்து வேலூர் வந்தோம்.

அங்கு அவனை 'casualty' அவசர சிகிச்சையில் அனுமதித்து 10 டாக்டர்கள் சோதித்தனர். ''கண்டிஷன் மிகவும் சீரியஸாக

இருக்கிறது. வலி வந்த 12ஆம் தேதியே அழைத்து வந்திருக்க வேண்டும். இப்போது மிகவும் கஷ்டம். சொல்வதற்கு மன்னிக்கவும். அவரது இடக் கால் முட்டிக்குக் கீழ் இழக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் இரத்த குழாயில் அடைப்பு காரணமாய் கீழ்ப் பகுதி முழுவதும் கறுப்பாக ரத்தம் கெட்டு இருக்கிறது. இது பாதிப்படையச் செய்யும்'' எனவும் கூறினார்கள். ஆப்பரேஷன் உடனடியாக செய்யவேண்டும் எனவும் என்னிடமும், நோயாளியான தம்பியிடமே கூறிவிட்டனர். அவனுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. அவனது நிலைமை, கால்இன்றி மீதி நாட்கள், மிக கஷ்டம். இதை நினைத்து குடும்பத்தினர் மற்றும் எல்லோரும் மிக வருந்தினர்.

எனக்கு ஒரு பழக்கம், ஒரு மணிக்கு ஒரு முறை அன்னையை நினைப்பது. சரியாக 9.04க்கு அவன் தியேட்டருக்கு (ஆப்பரேஷன்) சென்றான். முன்பாக நான் 9.00 மணி அளவில் அன்னையை பிரார்த்தித்தேன். அன்னையை வெள்ளை ஒளியாக அவனது காலில் படும்படி நினைத்தேன். இதுபோல் செய்யும்படி அன்னை அன்பர் சொல்லியிருக்கிறார். அதன்படி நினைத்தேன், வழிபட்டேன். அப்போது '*அன்னை*' வெள்ளைஉடை அணிந்து அவனது (தம்பியின்) காலை பார்ப்பது போலவும், மேலும் என்னையும் தம்பியையும் பார்த்து புன்முறுவல் செய்வதுமாகத் தோன்றியது. நான் மிகவும் கவலை மறந்தேன். 'அன்னையின் பாதுகாப்பு' இருப்பதை எண்ணி கவலைப்படுவதைப் பாதியளவு குறைத்தேன்.

ஓர் அன்பர் சொல்வார், 'ஸ்ரீ அன்னை என்று 400 முறை சொல்லி வந்தால் எந்த பிரச்சினையும் தீரும்' என்று. நான் அதைச் செய்ய முயன்று சில நடந்திருக்கின்றன. பிரச்சினைகள் மறைந்திருக்கின்றன. இம்முறை (தியேட்டர் வாசலில்) முயன்றேன். ஆனால் ஏதோ ஒரு தைரியம், மனோதிடம் என்னை மிகவும் குதூகலிக்கச் செய்தது. அதைச் சொல்வதையும் விட்டேன்.

'அன்னையின் பாதுகாப்பு' முழுவதும் இருப்பதாக முழுவதும் உணர்ந்து தெளிந்தேன்.

ஆப்பரேஷன் தியேட்டரில் இருந்து அவன் வந்தான். முதலில் நான் பார்த்தது அவனது இரண்டு கால்களையும். அவை இருந்தன. டாக்டர்கள் சொல்லியதுபோல் கால் (இடது) நீக்கப்படவில்லை. முழுவதுமாய் இருந்தது. அவனும் பெட்டில் பார்த்து அதையே கேட்டான். கால் இருப்பது மிகவும் சந்தோஷம்என முகத்தில் ஒரு தெம்பு வந்தது.

மேலும் ஒரு வாரம் பெட்டில் இருந்து, அடுத்த ஞாயிறே வீட்டுக்கு வந்தான். கால் சற்று வலிப்பதனால் சற்று நொண்டி நடக்கிறான். இது சரிவர 2 மாதம் ஆகும். அவனுக்கு அன்னையின் அருள் முழுவதும் கிடைத்திருப்பது எனக்கு மிக சந்தோஷம்.

அன்னையின் ஒளி மற்றும் பாதுகாப்பு என்றும் எங்களுக்கு கிடைக்க அன்னையின் பாதார விந்தங்களுக்கு என் ஆயிரம் கோடி நமஸ்காரங்கள்.

அன்னையின் பெயரே மந்திரம். அவரது ஒளி அனைத்து உடல், மன பிரச்சினைகளையும் களையும்என்பது முழுஉண்மை.

அன்னைக்கும் ஸ்ரீ அரவிந்தருக்கும் என் நன்றிகள் பல.

அன்னையையும் ஸ்ரீ அரவிந்தரையும் எனக்கு காண்பித்த குரு ஸ்ரீ கர்மயோகி அப்பா அவர்களுக்கும் என் நன்றியும் நமஸ்காரங்களும்.

-- *வெங்கட், தர்மபுரி*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜீவனின் ஆழ்ந்த நிலையும், மேலெழுந்தவாரியான நிலையும் மனம், உணர்வு, உடல் ஆகியவை இரு நிலைகளிலும் உள்ளன.

***மனமும், உணர்வும் எல்லாநிலைகட்கும் உண்டு.***

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

141. *எட்டு வயதில் பெறாத கல்வியும், ஈரெட்டில் பெறாத பிள்ளையும் உதவா.*

✶ **வாழ்வில் பெறாத சித்தி, செயலில் காணாத சமர்ப்பணம் உதவா.**

142. *ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் ஈடேறா.*

✶ **அவை திருவுருமாறினால் திக்கெட்டும் விளங்கும்.**

143. *குருவுக்கு மிஞ்சிய சிஷ்யன்.*

✶ **ஒவ்வொரு தலைமுறையும் முன் தலைமுறையைக் கடக்க வேண்டும்.**

144. *கர்மவினை அனுபவித்தே தீரவேண்டும்.*

✶ **அருள் தரும் அதிர்ஷ்டத்திலிருந்து தப்ப முடியாது.**

145. *தெய்வத்திற்கே பொறுக்கவில்லை.*

✶ **பொறுமைக்கே பொறுக்கவில்லை.**

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதனுடைய ஆன்மாவை உள்ளத்து வாழ்வோடிணைப்பது ஆழ்ந்த நோக்கங்களாகும் (motives).



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**976) நம் நிலை காலத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. நிலையை மாற்றவோ, காலத்தைச் சுருக்கவோ நாம் காலத்தைக் கடக்க வேண்டும். மனத்தையே கடப்பது சிறந்தது.**

***நிலையை மாற்றுவதற்குப் பதிலாக மனத்தையே கடப்பது சிறந்தது.***

காலம் மாறும்பொழுது மனிதர்களும் மாறுகின்றனர். அத்துடன் மனநிலையும் மாறுகிறது. காலம் நம் நிலையை நிர்ணயிக்கிறது. நம்மால் அதை மாற்ற முடியாது. எந்த நிலையில் உள்ளவரும் காலத்திற்குப் பணிந்து போகவேண்டும், அனுசரித்துப் போக வேண்டும். இளைஞர்கள், தொழிலாளிகள், மாணவர்கள், மருமகள்கள் 50 ஆண்டுக்கு முன்னிருந்ததைப் போலிருக்க வேண்டும்என எதிர்பார்க்க முடியாது.

✣ *அதுவும் நடக்கும். அது நடக்க நாம் காலத்தைக் கடக்க வேண்டும்.*

காலத்தைக் கடப்பதுஎனில் என்ன? கடந்த காலத்தையே நினைந்து உருகுபவர் உண்டு. அதைப் பொருட்படுத்தாதவருண்டு. அதிகமாகப் பொருட்படுத்துபவரை கடந்த காலம் ஆட்டிப் படைக்கும். "அதுதான் போய்விட்டதே. ஏன் அதை நினைத்து அதற்கு உயிர் கொடுக்கிறாய். நடப்பதைப் பார்" என அவருக்குச் சொல்வார்கள். கடந்த அனுபவத்தைப் போற்ற வேண்டும். நடந்து முடிந்தவற்றை மீண்டும் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து சோர்வடைதல் சரியில்லை.

✻ ஒருவர் கடந்ததிற்கு தம் நினைவால் உயிர் கொடுக்க மறுத்தால், அந்த அளவுக்கு அவரைக் கடந்த காலம் பாதிக்காது.

* சந்தோஷம் அபரிமிதமானால் கடந்தது மறந்துபோகும். வெற்றி அதிகமானாலும் கடந்தது மறந்துபோகும்.
* கடந்ததை நல்ல காரணத்திற்கோ, கெட்ட காரணத்திற்கோ மறக்கலாம்.

  **கெட்ட காரணத்திற்கு மறக்க முயன்றால், அதிகமாக நினைவு வரும்**.

  அப்படி மறந்துபோனால் நாள் கழித்து விஸ்வரூபம் எடுத்து எதிரில் வந்து நிற்கும்.
* கடந்ததை மறப்பது காலத்தைக் கடப்பதாகும்.

## மனத்தையே கடக்கலாம்:

சிந்தனை அழிவது மனத்தைக் கடப்பதாகும். அது பெரிய யோக சித்தி. அது முடியாத ஒன்றானால் நாம் ஏன் அதைக் கருத வேண்டும்? **முடியாதது அன்பருக்கு முடியும்**.

பிரார்த்தனை பலிக்கும். எல்லாப்பிரார்த்தனைகளும் தவறாது ஒன்று விடாமல் பலிப்பதுண்டு. அவர் அன்னைக்குரிய அன்பர். நான் அன்னையைப் பல வருஷமாக அறிவேன். எனக்குப் பிரார்த்தனை தவறியதில்லைஎனக் கூறும் அன்பர் மனத்தைக் கடக்க வழியுண்டு. அப்படிப்பட்ட அன்பர் பிரார்த்திப்பதை நிறுத்தினால் இரு வகை-களான பலன் எழும். *(1)* பலிப்பது நின்றுவிடும், *(2)* **பிரார்த்தனை செய்த பொழுது பலித்ததுபோல பிரார்த்திக்காதபொழுதும் பலிக்கும்**. அப்படிப் பலிப்பதற்கு நம் (level of consciousness) மனநிலை, ஜீவிய நிலை உயர்ந்துவிட்டதுஎனப் பொருள். அந்த அளவில் அது மனத்தைக் கடந்ததாகும். அந்நிலையைக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தினால், பிரார்த்திக்க வேண்டியவை பிரார்த்திக்காமல் பலிக்கும் ஜீவியம் நிரந்தரமாகும்.

* அது மனத்தைக் கடந்ததாகும்.
* அந்நிலையில் மௌனம் மனத்துள் குடிகொள்ளும்.
* மௌன சித்தி யோக சித்தி.
* மௌனம் நிலையானால் மனத்தை நிரந்தரமாகக் கடந்துவிட்டோம்.

❀ ❀ ❀



**977) நம் பார்வையை நிர்ணயிப்பது நம் நோக்கம். பிரபஞ்சத்தின் ஆத்மா தன் பரிணாம வளர்ச்சியை, தனி மனிதனின் நோக்கமாக வெளிப்படுத்துகிறது.**

***நம் பார்வையை நிர்ணயிப்பது நம் நோக்கம்.***

* நோக்கம் மாறினால் கண்ணாடிக்கல் வைரக்கல்லாகும்.
* விருது கொண்டு வரும் போலீஸ்காரனை அரெஸ்ட் செய்ய வருபவன்எனத் தவறாகப் பார்த்து பயப்படுபவன்போல் மனிதனிருக்கிறான்.
* எலிசபெத், டார்சி மோசமான மனிதன், தன் குடும்பத்தை அழிப்பவன்என நினைக்கும்பொழுது, பெம்பர்லிக்கு அவள் ராணியாக வர அவன் ஏங்குகிறான்.
* **அபிப்பிராயம் வேறு, அங்குள்ள நிலைமை வேறு**.
* *Pride and Prejudice* என்ற கதை தவறான அபிப்பிராயம் செய்யும் பாதகத்தைக் கூறுகிறது.
* அன்பர்கள் இன்று அதுபோல் வாழ்வைப்பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயம் ஏராளம்.

  ஓர் அபிப்பிராயத்தை மாற்றினால் நிலைமை வாடகை வீடு சொந்த வீடாகுவதுபோல் மாறும்.
* சேமித்தால் பணம் பெருகும்என்று அபிப்பிராயத்தைக் கைவிட்டு செலவு செய்தால் பணம் பெருகும்என்று கொண்டால் வருஷ வருமானம் மாத வருமானமாகும்.
* குடும்ப டாக்டருடைய திறமையைப் பாராட்டி 40 அல்லது 50 முறை அவரிடம் சென்று 50,000 ரூபாய் வருஷத்தில் செலவு செய்து உடல் நலிவால் வாடும் குடும்பம், டாக்டர் வியாதியை உற்பத்தி செய்து பிறகு குணப்படுத்துகிறார்என பகவான் கூறுவதை நம்பினால் உடல் நலம் பெருகி, மனவளம் செழித்து, டாக்டரும் மருந்தும் மறந்துபோகும்.
* பிள்ளை டாக்டராக வேண்டும், என்ஜினியராக வேண்டும்

என்று முயன்று வெற்றி காண்பவர், பிள்ளை படிக்க வேண்டும், அறிவுபெற வேண்டும்என மனத்தை மாற்றிக் கொண்டால் பெர்னார்ட் ஷாவும், தாகூரும் நம் வீட்டில் எழுவார்எனக் காண்பார்கள்.

✡ ஜாதகப்படி எனக்கு எதுவுமில்லைஎன நம்பும் ஒருவர் அன்னையை ஏற்று, ஜாதகத்தை நம்ப மறுத்தால், 50,000 ரூபாய் பெறும் அவர் ஒரு ஏக்கர் நிலம் மனையாக மாறி 50 இலட்சமாகும்.

✡ என்னால் ஆங்கிலம் இதுவரை பாஸ் மார்க் வாங்க முடிந்ததில்லைஎன்ற SSLC மாணவன், எனக்கும் இங்கிலீஷ் எழுத வரும்என்று நம்பியவுடன் பரீட்சையில் முதல் மாணவனாகத் தேறியது என் அனுபவம்.

## *Spiritual Individual - ஆன்மீக மனிதன்*

உலகம் மனிதனுக்குப் பிரபஞ்சத்தில் ஆன்மீக மனிதன்என்ற அந்தஸ்தை வைத்துக்கொண்டு காத்திருக்கிறது. அதை ஏற்றால் உலகம் முழுவதையும் கடந்த சக்தி பெற்று, இறைவனின் பிரதிநிதியாகலாம்என்ற நோக்கத்தை ஏற்க முடியாமல், ''என் கடனைத் தீர்க்க முடியவில்லை, எலக்ஷன் தோற்றது, குடும்பத்தின் எதிர்காலம் என்ன ஆகும்'' என்றெல்லாம் நினைத்து வருந்தும் மனிதனுடைய நிலை பரிதாபத்திற்குரியது.

✡ மனம் மாறினால் மதர் வருவார்கள்.

✡ ஒரு விஷயத்தில் மனம் மாறினால் தொண்டன் தலைவன் ஆவான்.

✡ ஒரு நோக்கம் மாறினால் உலகை ஆள முடியும்.

✡ பார்வை பவித்திரமானால், பண்பு தெய்வீகப் பண்பாகும்.

✡ அனைவருடைய தயவை இன்று எதிர்பார்க்கும் மனிதன் மன மாற்றத்தால் அனைவருக்கும் உதவி செய்ய முடியும்.

❀ ❀ ❀

*தொடரும்....*





## பகவான் ஸ்ரீ அரவிந்தர் கோபப்பட்டதேயில்லை

***– Volume-IV, page 51***

அவர் செய்கைகட்கு உள் அர்த்தம் உண்டு. அதையறியாமல் சாதகர்கள் அவர் மேஜையை வேறு இடத்தில் போடுகிறார்கள். அவரால் எழுத முடிவதில்லை.

✡ *பகவான் வேறு உலகத்தைச் சார்ந்தவர்.*

✡ *நம்மால் அவர் தேவைகளை, செயல்களை அறிய முடியாது.*

எகிப்தில் ஆந்திரா ஆபீசர்கள் அமெரிக்க நண்பரை விருந்திற்கு அழைத்தனர். மோர்க்குழம்பு ஆந்திரக் குடும்பங்களில் விசேஷமானது. மோர்க்குழம்பு பச்சை மிளகாய் அரைத்து செய்யப்படுவது. அமெரிக்கர்கள் காரத்தை சிறிதளவும் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள். வந்த விருந்தாளி விஷயமறியாமல் ஒரு வாய் மோர்க்குழம்பு சாதத்தை வாயில் போட்டவுடன் நெருப்பை வாயில் போட்டதுபோல துள்ளிக் குதித்து ஓடினார். வாயில் காரம் தாங்கவில்லை. அங்கிருந்த பூக்கிண்ணத்தை எடுத்து பூவை வீசிவிட்டு தண்ணீரைக் குடித்தார். பிற நாட்டாரிடம் நாம் பழகுவதோ, நம்மிடம் அவர்கள் பழகுவதோ சிரமம், ஒத்துவாராது. 10 அல்லது 20 வருஷம் உடன் உறைந்தாலும் சாப்பாடு, பழக்கவழக்கங்களை அறிந்து செயல்பட முடியாது.

*பகவான் சூட்சுமலோகம், காரணலோகத்தைச் சார்ந்தவர், நம்முடன் வாழ்பவர்.*

✡ ஒரு முறை கோபப்படுவது அவர் போன்றவர்க்கு ஒத்துவாராது. நாம் ஒரு நாள் ஜெயிலுக்குப் போய் வந்ததுபோலாகும். மீண்டும் சமூகத்தில் சேர முடியாது.

✡ ஒரு முறை துரோகம் செய்த பின் நட்பு நீடிக்காதுஎன்பது போல, பகவான் ஒரு முறை கோபப்பட முடியாது. கோபப்பட்டால் நம் உலகுக்கு வரவேண்டும். மீண்டும் காரணலோகத்திற்கு எளிதில் போக முடியாது.

✡ கற்பு, நாணயம், விஸ்வாசம் தவறக்கூடியதில்லை என்பதுபோல் பகவானுக்கு கோபம் வந்து அடங்குவதும் ஒத்துவாராது.

✡ அன்னை அவரை சூட்சுமஉலகில் கண்டபொழுது உடலில் பல இடங்களிலும் கட்டுப் போட்டிருந்தது. என்னஎன்று விசாரித்-தார். ''நான் எழுதியவற்றை சாதகர்கள் திருத்துகிறார்கள்'' என்றார்.

உட்கார்ந்து எழுதுமிடம், எழுதும் நேரம், அவருக்குத் தேவையான பேனா, பேப்பர், மற்ற புத்தகங்களை உடனிருப்பவர் பகவான் சௌகரியத்திற்காக ஏற்பாடு செய்தால், பகவானால் எழுத முடியாது. ஒரு பெரிய ஆபீசில் ஒரு நாளைக்கு private secretary வரவில்லையெனில் அந்த வேலையை அடுத்தவர் திருப்தியாகச் செய்ய முடியாது. பூலா என்பவர் எலக்ட்ரிசிட்டிக்கு பொறுப்புள்ளவர். அன்னை அறையில் ஒரு புது ஒயர் wire போட ஒரு மேஜையை நகர்த்த அவர் பட்டபாடு சில மணி உழைப்பாயிற்று. அதன் மீதுள்ள பொருள்களை மீண்டும் அதேபோல் வைக்க வேண்டும்என அன்னை கூறினார். சம்பக்லால் பகவான் கட்டிலின் முன்னிருந்து ஒரு ஸ்டூலை எடுக்க வந்தபொழுது பகவான், ''அது அன்னையால் அங்கு வைக்கப்பட்டது'' என்றார். அதை நகர்த்த எவருக்கும் உரிமையில்லை. இவை ஜட உலகச் செயல்கள். அடுத்த லோகங்களை நாம் அறிவதெப்படி? ஏன் கோபம் வருகிறது? காரணங்கள் பல.

1) அறியாமை.
2) இயலாமை.
3) பொறாமை.
4) பொறுமையின்மை.
5) பழக்கம்.
6) பரம்பரைப் பழக்கம்.



7) சூழலில் பலரும் கோபப்பட்டால் நமக்கு கோபம் வரும்.
8) நெடுநாள் முன்பட்டது நேரடியாகவோ, மறைமுகமாகவோ நினைவு வந்தால் கோபம் வரும்.
9) உடல் தெம்பை இழந்தால் கோபம் வரும்.
10) பழக்கம் ருசிப்பதால் நாமே கோபத்தை நாடுகிறோம்.
11) தீயசக்திகள் நம்மை சீண்டினால்.
12) யோகம் சித்தியை நெருங்கினால் கோபம் வரும்.
13) கோபக்காரர் மீது ஆசை வந்தால்.

பகவான் இவற்றையெல்லாம் கடந்தவர். அதனால் அவருக்குக் கோபம் வருவதில்லை. இவற்றுள் ஏதாவது ஒன்றைச் செய்து பார்த்தவருக்கு அதன் சிறப்பு தெரியும்.

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

உரிமை பாராட்டுவது ஆசையைக் குறிக்கின்றது. விருப்பு, வெறுப்பு அகந்தையைக் குறிக்கிறது. காட்சி ஏற்பட்டு திருஷ்டியாக முதிராமலிருப்பது மனத்தைக் குறிக்கிறது.

***மனம் மறைந்தால் திருஷ்டி கிட்டும்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

உடனுள்ளவருடன் உணர்ச்சிபூர்வமாகச் செயல்படுவதற்கே (responding and reacting) நம் சக்தி முழுவதும் செலவாகிறது.

***அர்த்தமற்ற சூழலைக் கடந்தால் சாதிக்கலாம்.***

## மனிதமையத்தின் மகத்துவம்

கர்மயோகி

- சத்திலிருந்து ஜடம்வரை நம்முள் அனைத்துமிருந்தாலும், ஒரேயொருயிடமே நடைமுறைக்குப் பயன்படும் வகையில் அமைந்துள்ளது.
- ஆன்மா முதல் ஜடம்வரை இவை அடுக்கடுக்காக அமைந்துள்ளதில் அவற்றின் சூட்சுமலோகங்களும் உடன் உறைகின்றன.
- நேரம் கருதி ஆழம் மேலே வரும்.
- பெரிய மனிதனுக்கு அது அதிகமாக வரும், அடிக்கடி வரும்.
- வேலையில் உள்ள பொறுப்பு, தீவிரம், திறமையைப் பொறுத்து ஆழம் மேலே வரும். அடிக்கடி வருவது மேலே நின்றுவிடுவதும் உண்டு.
- அலட்சியமானவன் இந்த அம்சத்தைப் பொருட்படுத்தமாட்டான்.
- சமர்ப்பணத்தை ஆழத்தில் நிலைநிறுத்தினால் ஆழம் மேலே வந்து சிறியவன் பெரியவனாக நிலையாக மாறுவான்.
- இதைச் சாதிப்பதற்கும் சமர்ப்பணம் பயன்படும்.
- சமர்ப்பணம் அன்னையையடைய உதவும் என்பதுமட்டுமன்று. எதையும், எவரையும், எந்த நேரத்தையும், எந்த அசைவையும் அன்னையாக்க வல்லது சமர்ப்பணம். அகத்தைப் புறமாக்கி, புறத்தை அகமாக்கி, இரண்டையும் ஒன்றாக்குவது சமர்ப்பணம்.
- மனிதமையம் பிரபஞ்சம்போல் கோடிக்கணக்கான மையங்களாகி, மையம் மகிமையாகும்.
- சமர்ப்பணத்திற்குப் பலன் உண்டு, முறையுண்டு, மூலம் உண்டு.
- பலனிலிருந்து முறைக்குப் போனால், ஞானம், சக்தியுள்ள ஞானமாகும். முறையிலிருந்து மூலத்திற்குப் போனால் திருவுருமாற்றம், இரஸவாதமாகும். சமர்ப்பணம் சரணாகதியாகி முடிவில் அகமும், புறமும் இணைந்த ஒன்றான பிரம்மமாகும்.
- அன்னையே முறை. முறையே அன்னை.
- அனைத்தும் அன்னை.
- செயலை சமர்ப்பணமாக்கி, சமர்ப்பணத்தை சரணாகதியாக்கி, சரணாகதி புறத்திலிருந்து அகத்திற்குப் போய், அகமும் புறமும் இணைந்து, இணைந்தவை பரிணாமத்தால் இறைவனாகி, இறைவன் அருளாகி, அன்னையாக நம்மை வந்து பேரருளான வாழ்வாவது பக்தி. பக்தியில் ஆரம்பித்த யோகம் முடிவில் பரமனாவது யோகம் சித்திப்பதாகும்.
- ***மனிதமையம் மகிமை நிறைந்த அன்னையின் உலகமாவது ஆண்டவனின் திருவுள்ளம்.***

❀ ❀ ❀



### ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரச்சினையைத் தீர்க்கும் ஆர்வத்தைவிட, அன்னையை நாடும் ஆர்வம் அதிகமானால் பிரச்சினை தீரும்.

***பிரச்சினை அன்னைக்குட்பட்டது.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பகுத்தறிவுவாதிக்கும், மத வழிபாட்டை நாடுபவனுக்கும் ஆன்மீக திருஷ்டியை எடுத்துச் சொல்பவை சிந்தனை மணிகள்.

## வாழ்வுக்கு நன்மையும், தீமையும் ஒன்றே. நல்லதிலிருந்து கெட்டதும், கெட்டதிலிருந்து நல்லதும் எழும் (P.623)

நல்லது, கெட்டதுஎன்பன மனிதனுக்கு. இறைவனுக்கும், இயற்கைக்கும் அப்பாகுபாடில்லை. மனிதனுக்கு அசுத்தம் உண்டு. விலங்கிற்கு அது இல்லை. காடு இயற்கைவளம் நிறைந்த இடம். கடலும் அப்படியே. காட்டில் சுத்தமில்லை. கடலடியில் சேறும் சகதியும் நிறைந்துள்ளன. கடலில் முத்தும், பவழமும் உற்பத்தியாகின்றன. காட்டில் அகிலும், தேக்கும் உண்டு. கொலை, உயிர்ச்சேதம் மனிதனுக்குத் தவறு, பாவம். மிருகம் கொலை செய்வதால் உயிர் வாழ்கிறது. பூகம்பம் ஏராளமான உயிர்ச்சேதம் உண்டு பண்ணுகிறது. இயற்கைக்கு அது தவறன்று. உலகப்போர் விளைவித்த சேதம் பெரியது. அதனால், அதன்பின் 50 ஆண்டுகளில் அதற்கு முந்தைய 500 ஆண்டுகளில் இல்லாத முன்னேற்றமேற்பட்டது. 1917இல் ரஷ்யாவில் புரட்சி எழுந்தது. போலீஸ்ராஜ்யம் ஏற்பட்டு 30 லட்சம் நிரபராதியான மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆனால் பின் தங்கிய நாடாக இருந்த ரஷ்யா வல்லரசாயிற்று. 1946, 1947இல் பஞ்சாபில் மேற்குப் பகுதியில் எல்லாஇந்துக்களும் கொலை செய்யப்பட்டனர். கிழக்குப் பகுதியில் எல்லாமுஸ்லீம்களும் கொல்லப்பட்டனர். அதன் பிறகு பஞ்சாப் பெற்ற முன்னேற்றம் பெரியது. பஞ்சாபும், ஹரியானாவும் இந்தியாவில் முதன்மையான மாநிலங்களாயின. கெட்டதினின்று நல்லது எழுகிறது. 1905இல் ஐன்ஸ்டீன் (theory of relativity) காலம், இடத்தைப்பற்றிய புது தத்துவத்தைக் கண்டுபிடித்தார். நோபல்பரிசு பெற்றார். அவருடைய தொடர்ந்த ஆராய்ச்சியால் அணுகுண்டு செய்யப்பட்டது. அதைவிடப் பெரிய பாதகமில்லை. துரியோதனன் சபையில் சூதாட்டத்தில் பாண்டவர் நாட்டை இழந்தனர். திரௌபதி மானபங்கப்படுத்தப்-



பட்டாள். அதன் விளைவாக அவள் பெற்றது கிருஷ்ண தரிசனம். நாட்டில் துரியோதனனின் வம்சம் அழிந்து நன்மை தலையெடுத்தது. 1960 முதல் 1980 வரை 200 பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. அதன் ஒரேபலன் நாடெங்கும் ஸ்டிரைக், வருஷம் முழுவதும் கல்லூரிகள் மூடப்பட்டன. ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அநியாயமாக அழிந்தது. கல்வித் தரம் அழிந்தது. பட்டம் பெற்றவர் எழுதப் படிக்கத் தெரியாதவராயினர். பசுமைப் புரட்சி 1965 முதல் 1990 வரை நாடெங்கும் பரவியது. உணவு உற்பத்தி 4,5 மடங்கு பெருகியது. அதன் நேரடிவிளைவு மண் தரம்இழந்தது, நீர் விஷமாயிற்று, பூமிக்கு அடியிலுள்ள நீர் 300 அடிக்கும் கீழே போயிற்று. பெரிய நல்லதான பசுமைப் புரட்சியால் விவசாயமே சீரழிந்தது. நாடு 1985க்குப்பிறகு சுபிட்சமாயிற்று. போக்குவரத்து பேர்அளவில் பெருகியது. வீட்டிற்கு வீடு காராயிற்று, மோட்டார்பைக் சைக்கிள் போலப் பரவியது. பஜாஜ் நிறுவனம் உலகில் முதன்மையாயிற்று. காற்றில் புகை நிறைந்து மூச்சுவிடும் காற்று விஷமாக மாறுகிறது.

- ❒ வாழ்வுக்கும், இயற்கைக்கும், இறைவனுக்கும், விலங்கிற்கும் நல்லதும் கெட்டதும் ஒன்றே.
- ❒ எந்த நல்லதுமூலமும் எந்தக் கெட்டதும் எழும்.
- ❒ எந்தக் கெட்டதுமூலமும் எந்த நல்லதும் எழும்.
- ❒ நல்லது, கெட்டதுஎன்ற பாகுபாடு மனிதனுக்குமட்டும் உண்டு.

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

உணர்வையும் எண்ணத்தையும் மீறிய சக்தியுடைய (will) திறனிருந்தால்தான் சமர்ப்பணத்தை ஆரம்பிக்க முடியும்.

***முழுமனமும் கட்டுப்பட்டால் சமர்ப்பணம் உண்டு.***

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**(33) அறிவு ஞானமாவது**

- சிறிய காரியங்களில் அறிவு பலன் தரும்படிச் செயல்படும்.
- பெரிய காரியங்களில் பலன்பெற ஞானம் தேவை.
- ஒரு முறைகூட பிரார்த்தனை தவறாதவர்க்கு பிரார்த்தனை தவறினால் அறிவு பீதியுறும், ''ஞானம் பிரார்த்தனையைக் கடந்த நிலையை இது காட்டுகிறது'' எனக் கூறும்.
- இந்த ஊரில் எவரும் செருப்பு அணியவில்லைஎனில் அறிவு இங்கு செருப்புக்கு மார்க்கட்டில்லைஎனக் கூறும். ஞானம் செருப்புக்கு இங்கு அளவு கடந்த மார்க்கட்டுள்ளதுஎனும்.
- ஐரோப்பாவே சரணானபின் இங்கிலாந்து ஹிட்லர்முன் எம்மாத்திரம்என அறிவு அறிவுரை கூறும்பொழுது ஞானம், ''இதுவே பெரிய வாய்ப்பு'' என்று வழி காட்டும்.
- இனி நம்புவதற்கு ஒருவருமில்லை, ஒரு வழியுமில்லைஎன்று அறிவு அறுதியிட்டுக் கூறும்பொழுது ஞானம், ''**இதுவே அன்னையை அழைக்க அற்புதமான தருணம். எந்த நேரத்திலுமில்லாதபடி அன்னை செயல்படுவார்**'' எனக் கூறும்.
- கிராமத்தில் தீராத ஜாதிப் பிரச்சினை அவிழாத சிக்கலான பின் அறிவு செய்வதற்கொன்றுமில்லையென விலகியபொழுது ஞானம் பிரச்சினையை கிராமம்என்ற சிறு பகுதியினின்று எடுத்து ஜில்லாஎன்ற நோக்கோடு பார்த்தல் நன்றுஎனக் கூறும். அந்த நோக்கில் எதிரிகள் சேர்ந்து பிரச்சினை விலகும்.
- நம் சிறுஅம்சம் பிரச்சினையானால், நம் பெரிய அம்சத்தின் நோக்கில் பிரச்சினை தீரும். அல்லது வாய்ப்பாக மாறும்.



விவசாயிகட்கு கடன் கொடுத்தால் பணம் மீண்டும் வசூலாகாதுஎன்ற நிலையில் அறிவு அந்த செயலில் ஈடுபடாது. ஞானம் அதே விஷயத்தை கிராமத்தின் நோக்கில் பார்க்காமல் பரந்த நாட்டின் கண்ணோட்டத்துடன் பார்க்கும்பொழுது கொடுக்க மாட்டார்கள்என்ற நிலை நிச்சயமாக வசூலாகும்என மாறுகிறது. அறிவிலிருந்து ஞானத்திற்கு மாறினால் பிரச்சினை தீருகிறது. நாட்டிற்குச் சேவை செய்ய முடிகிறது.

## ஷெர்லக் ஹோம்ஸ் கதை:

வட்டிக் கடைக்காரனுக்குப் புதுஆள் வந்தது. காலை 10 முதல் 2 மணி வரை எழுத்து வேலைக்கு 1 நாளைக்கு 1 வாரச் சம்பளம் கொடுத்தனர். 2 மாதத்திற்குப்பின் அவ்வேலையில்லை. வட்டிக் கடைக்காரன் ஷெர்லக் ஹோம்ஸிடம் வந்து ''இது என்ன?'' என்று கேட்டான். 'ஏன் 1 நாளைக்கு 1 வாரச் சம்பளம் தருகிறார்' என்று வட்டிக் கடைக்காரனுக்குப் புரியவில்லை. ஏன் அது முடிந்தது எனவும் விளங்கவில்லை, எவ்வளவு யோசனை செய்தாலும் அவனுக்கு விளங்கவில்லை. அதுவே அறிவுக்கு அதிகபட்சம்.

ஷெர்லக் ஹோம்ஸ் கடையை வந்து பார்த்தான். அந்தப் புது ஆள் பெரிய கேடி. கடைக்குப் பக்கத்தில் பாங்க் இருக்கிறது. 10 முதல் 2வரை முதலாளியில்லாவிட்டால் அடுத்த அறை மூலம் பாங்க்கிற்கு சுரங்கம் தோண்ட முடியும்என்று தோன்றியது. ரோட்டில் வந்து தடியால் தட்டினால் உள்ளே மண்ணில்லாத சப்தம் வருகிறது. பாங்கில் விசாரித்தால் சமீபத்தில் £30,000 பவுன் வந்ததாகத் தெரிகிறது.

வட்டிக் கடைக்காரன் தன்னளவிலேயே எவ்வளவு யோசனை செய்வதும் புரியாது. அது அறிவு. ஷெர்லக் ஹோம்ஸ் வந்தவன் யார், இருப்பது என்ன இடம், அங்கு என்ன நடந்ததுஎன சந்தர்ப்பத்தை முழுமையாக்கிப் பார்ப்பது ஞானம்.

**பகுதிக்குப் புரியாதது முழுமைக்குப் புரியும்.**

**அது அறிவு ஞானமாகும் பாதை.**

அன்பருக்கு அதுபோன்ற அனுபவம் வந்தால் அவருக்கு யோகத் தகுதியுண்டுஎனப் புரிய வேண்டும்.

என் மனையை சர்க்கார் எடுத்துக் கொண்டு 17,000 பெறுமான நிலத்திற்கு 2,500 கொடுப்பது அநியாயம்என்றார் ஒருவர். ஞானமுள்ளவர், ''உங்கள் சொந்தப் பிரச்சினையைப் பொதுப் பிரச்சினையாக்கினால் இது மாஜி இராணுவ சிப்பாயின் நிலம். அதை எடுக்க சர்க்காருக்கு அனுமதியில்லை'' என்றார். சர்க்கார் உத்தரவு இரத்தாயிற்று. அந்த அன்பர் யோகம் செய்தால் அவருக்கு யோகம் பலிக்கும்.

## (34) ஞானம் சித்திக்கு வாயில்

உலகம் விவசாயத்தை கண்டுபிடித்து கொண்டாடும் நாளில் வேதரிஷிகள் சச்சிதானந்தத்தைக் கண்டனர். வேத கால இலக்கியங்களில் ஏர் என்ற சொல் காணப்படவில்லை என்பதால் அக்காலத்தில் நிலம் உழப்படவில்லைஎன்று கூறுகிறார்கள். முக்கியமாக காய், கனி, பால், தயிர், வெண்ணெய், நெய் அவர்கள் உணவாக இருந்தன.

இந்த நூற்றாண்டில் ஜடம் சக்தியாலானதுஎன விஞ்ஞானிகள் கண்டதை உபநிஷதம் கூறுகிறது. அந்த ஆன்மீகப் பரம்பரை தேடியது மோட்சம்.

பகவான் மோட்சம் உயர்ந்த இலட்சியமில்லை. அதனுள் ஆத்மாவின் சுயநலம் உண்டுஎன்கிறார்.

மோட்சத்திற்கு ஏராளமான பேர் போனபின்னும் உலகம் துரியோதனாதிகளை விட்டகலவில்லை. தீமை தலைவிரித்தாடுகிறது, கொடிகட்டிப் பறக்கிறது.



**திருவுருமாற்றம் பகவான் இலட்சியம்.**

**அது வந்தால் துரியோதனனும் அவன் சகாக்களும் இருக்க முடியாது.**

**உலகம் உய்வடையும்.**

ஸ்ரீ அரவிந்தம்என்பது இந்த தத்துவம்.

அதன் அம்சங்கள்,

- பிரம்மம் அசைவற்றதுமட்டுமன்று, அசையக்கூடியதுமாகும்.

  பிரம்மமே உலகமாயிற்று.

  பிரம்மம் சத்தியஜீவியம்மூலம் உலகை ஆனந்தத்திற்காக சிருஷ்டித்தது.

  இந்த தரிசனம் அலிப்பூரில் பகவானுக்குக் கிடைத்தபொழுது அதில் கோரம், விகாரமில்லை.

  மனிதன் மனத்தினின்று சத்தியஜீவியத்திற்கு உயர்ந்தால்,

1) அவன் ஜீவன் மௌனத்தால் ஆட்கொள்ளப்படும்.
2) அவன் மையம் மனத்திலிருந்து நகர்ந்து இதயத்திற்குப் பின்னால் போகும்.
3) மேல் மனத்திலிருந்து அவன் நகர்ந்துவிடுவான்.
4) அவனுடைய தியானம் ஜீவ நிஷ்டையாகும்.
5) அவன் பார்வையிலோ, அனுபவத்திலோ தீமை வாராது, தோல்வி எழாது.
6) காலமும், கர்மமும் அவனுக்குக் கட்டுப்படும்.
7) அவனுக்கு யோகம்என்பது வாழ்வு, யோக சாதனம்என்பது சரணாகதி, சமர்ப்பணம்.
8) பிறரில் தன்னையும், தன்னைப் பிறரிலும் காண்பான்.
9) எங்கிருந்தாலும் அவன் அன்னைபால் ஈர்க்கப்படுவான்.
10) அவன் செயல்கள் உலகில் பரவும்.

- ஞானம்என்பது எப்படி சிருஷ்டி ஏற்பட்டதுஎன்பது.

  பிரம்மம் - சச்சிதானந்தம் - சத்தியஜீவியம் - மனம் - வாழ்வு - உடல்என்ற சிருஷ்டி சத் பிரம்மம், புருஷா, ஈஸ்வரனாக மாறுவதால் ஏற்படுகிறது. அவற்றைக் காலமும், இடமும் தாங்கிப் பிடிக்கின்றன.

- இந்த ஞானம் பரிணாமத்திற்கு நம்மை எடுத்துச் செல்லும். இந்த அளவுக்கு *The Life Divine* புரிவது ஸ்ரீ அரவிந்த ஞானம், பிரம்மஞானம் எனலாம்.

  - **இந்த ஞானம் பலித்தால் அவருக்கு யோகம் சித்திக்கும்.**
  - **புரிவது அறிவு, மனம் ஏற்பது ஞானம், யோகம் அதைச் செயலாக மாற்றுவது சித்தி.**

*தொடரும்....*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அதுபோன்ற திறனைப்பெற பண்பு உதவும். செய்யும் காரியத்தின் முழுமையை அறிவது, மனத்திற்குரிய செயல் பண்பு (work value of the mind).

செய்வதில் திளைப்பது உணர்வின் பண்பு.

காரியத்திற்குரிய எல்லாத்திறமைகளையும் பெறுவது செயலுக்குரிய பண்பு.

தானே நடக்கட்டும்என இருப்பது ஆன்மாவுக்குரிய பண்பு.

***தானே நடப்பது ஆன்மாவுக்காக நடப்பது.***





# திட்டு = தங்கச் சங்கிலி

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

பாட்டிக்குத் தான் அதிகம் பேசிவிட்டோமோஎன்ற அச்சம் எழுந்தது. மகன் வந்தால் என்ன சொல்வதுஎன்ற கவலை வேறு. மதியவுணவிற்கு வீட்டிற்கு வந்த சார் தீபாவின் அறை பூட்டியிருப்பதைப் பார்த்து, 'என்னயிது, இந்த நேரத்தில் ரூமைப் பூட்டிக்கொண்டு போகமாட்டாளே' என்றெண்ணி, ''அம்மா, தீபா ரூம் ஏன் பூட்டியிருக்கிறது?'' என்றார். சார் இல்லையென்றால், பாட்டியிடம் சொல்லிவிட்டுப் போவாள்.

''அவளுக்கு உடம்பு சரியில்லை போலிருக்கிறது. வீட்டிற்குப் போய்விட்டாள்'' என்று கூறிச் சமாளித்துவிட்டாள். நடந்தது தெரிந்தால் அவர் மிகவும் வருத்தப்படுவார். முதல் நாளே அவளை அடுப்பங்கரைக்குக் கூப்பிடாதேஎன்று விளையாட்டாகச் சொல்லியதை நினைவில் கொண்டாள் பாட்டி.

வீட்டிற்கு வந்த தீபா கண் கலங்கியிருந்ததைப் பார்த்து ரெங்கா தவித்துப்போனார். கோபத்தோடு வந்து கைப்பையை மேசைமீது 'ணங்'கென்று வைத்தாள்.

''அவர் யார் என்னைக் கேட்பதற்கு? என்னிஷ்டம், நான் எப்படி வேண்டுமானாலும் இருப்பேன். இதற்குத்தான் இவர்கள் வீட்டிற்கு வேலைக்குப் போனேனா? வேலையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்'' எனக் கத்தினாள்.

அங்கு ஏதோ இவளுக்குப் பிடிக்காதது நடந்திருக்கிறது. இப்போது கேட்டால் கோபத்தை விசிறிவிட்டதுபோலாகும்என்று ஒன்றும் புரியாதவர் போலிருந்தார் ரெங்கா.

''அப்பா! இனி நான் வேலைக்குப் போகமாட்டேன்'' என்றாள் ஆத்திரமாக.

''சரிம்மா. உனக்குப் பிடிக்கவில்லையென்றால் போக வேண்டாம், விடு'' என்று கோபம் தணியப் பேசினார்.

ஆனால் சினம் கொண்டவர் சிந்திப்பதில்லை அல்லவா? அவள் தணியவில்லை.

''பின்னே என்னப்பா? அவர்கள் வீட்டிற்கு நான் எதற்குப் போனேன், சமைக்கவா போனேன்? அந்தப் பாட்டி, 'நீங்கள் எனக்குச் செல்லம் கொடுத்து வளர்த்துவிட்டீர்கள். கண்டித்து வளர்க்கவில்லை. சமையல் கற்றுத் தரவில்லை' என்று பேசினார்'' என்றாள்.

(அவர் சொன்னது உண்மைதானே என்று உள்ளுக்குள் நினைத்துக்கொண்டார் ரெங்கா). ''போனால் போகிறது, விடு. இனி அந்த வீட்டிற்கு நீ வேலைக்குப் போகவேண்டாம்'' எனச் சமாதானமாய்க் கூறினார்.

தன் அறையில் சென்று படுக்கையில் விழுந்தாள். மனம் அடங்கவில்லை. அப்பா எத்தனை நயமாகச் சொல்வார். அப்பொழுதெல்லாம் எதிர்த்துப் பேசிய தன்னால் பாட்டியை எதிர்த்துப் பேச முடியவில்லையே, ஏன்? ஏனிப்படி ஒன்று என் வாழ்வில் நிகழ்ந்தது? சார் தினமும் என் திறமையை எப்படியெல்லாம் பாராட்டுவார்? சாருக்குத் தெரிந்தால் என்ன நினைப்பார்? பாட்டி சாரிடம் சொல்லியிருப்பாரா, மாட்டாரா? ஒரே சிந்தனை, அவமான உணர்ச்சி. துவண்டுபோனாள் தீபா. ரெங்காவிற்குக் குழந்தை முகத்தைப் பார்க்கவே வேதனையாய் இருந்தது. பாட்டி கேட்டதில் தவறொன்றுமில்லை. ஆனால் அதைத் தாங்கிக்கொள்ளும் பக்குவம் தீபாவிற்கில்லையே. எல்லாம் அன்னை பார்த்துக்கொள்வார்என்று நினைத்து அமைதியானார்.

சார் போன் செய்தார். ரெங்காதான் போனை எடுத்தார்.

''தீபா உடம்பு சரியில்லைஎன்று வீட்டிற்குப் போனதாய் அம்மா சொன்னார்கள். தீபா இப்பொழுது எப்படியிருக்கிறாள்? இங்கிருந்தால் நான் வந்து டாக்டரிடம் அழைத்துப் போயிருப்பேனே'' என்று பரிவுடன் கேட்டார் சார்.

''அதெல்லாம் பெரிதாக ஒன்றுமில்லை. சொல்லிக்கொள்ளாமல் வந்துவிட்டாளாம், மன்னித்துவிடுங்கள். நான்கு நாட்களில் மீண்டும் வந்துவிடுவாள்'' என்று சமாதானமாகப் பேசினார் ரெங்கா.

''பரவாயில்லை, நானொன்றும் நினைக்கவில்லை. அவள் உடல்நலம்தான் முக்கியம். அவள் இல்லாமல் எனக்குக் கையொடிந்த



மாதிரியிருக்கிறது. நான் ஏதாவது செய்ய வேண்டுமென்றால் சொல்லுங்கள்'' என்றார். 'பெரிய மனிதர் பெரிய மனிதர்தான்' என்றது ரெங்காவின் மனம்.

''கவலைப்படும்படி ஒன்றுமில்லை. அவளுக்கும் இங்கே இருப்புக் கொள்ளாது. விரைவில் வந்துவிடுவாள்'' என்றார். அவரறியாமல் இப்படிப் பேச்சு வந்தது.

மாலை 5 மணியாகியும் தீபா அறையைவிட்டு வெளியே வரவில்லை. ரெங்கா மாலையில் தியானக் கூடலுக்குச் செல்ல வேண்டும். மெல்ல அவளிடம் சென்று, ''முகம் கழுவிக்கொண்டு இந்தப் பாலைக் குடி. இன்று என்னுடன் தியான மையத்திற்கு வா. அந்தச் சூழல் எல்லாத்துன்பத்தையும் அழித்துவிடும்'' என்று இதமாகச் சொன்னார்.

சாதாரணமாய் அவள் தியான மையத்திற்குச் செல்வதில்லை. எழுத்து, படிப்பு, கம்ப்யூட்டர் சென்டர், லைப்ரெரிஎன்று நேரம் செலவிடுவாளே தவிர, அப்பாவின் அன்னைபக்தியில் அக்கறை கொண்டதில்லை. அன்னையை அப்பா வழிபடும் தெய்வம்என்று புரிந்துகொண்டிருந்தாளேதவிர அறிந்துகொள்ளும் ஆவல் இருந்தது இல்லை.

இன்று அவள் அகந்தை அடிபட்டு மனம் வலிக்கிறது. பழகிய இடங்களுக்குப் போகப் பிடிக்கவில்லை. எனவே, முகம் கழுவி, அப்பா பரிவுடன் எடுத்து வந்த பாலைப் பருகிவிட்டு, அப்பாவுடன் மையத்திற்குப் புறப்பட்டாள்.

அங்கு சென்றதும் பூக்களின் நறுமணம், ஊதுபத்தியின் மெல்லிய மணம், எல்லாவற்றையும் தாண்டி அலைஅலையாக ஏதோ பரவசம் வந்து மோதியது.

''தீபா! நான் இங்கே சர்வீஸ் மெம்பர். எனக்கென சில பணிகள் உண்டு. நீ (அங்கே அன்னை, பகவான் சின்னங்களை மலர்களால் அலங்கரிக்கும் பெண்களைக் காட்டி) இவர்களுடன் இங்கே இரு'' என்றார். அவளையொத்த இளம் பெண்கள் அவளை நட்புடன் பார்வையால் அழைத்துத் தங்களுடன் பணியில் சேர்த்துக் கொண்டனர். அக்கணமே எல்லாம் மறந்துபோனது. ஸ்ரீ அன்னையின் சின்னத்தை மலர்களின் வண்ணங்கள் பொருந்துமாறு அமைத்து

அழகுபடுத்திவிட்டாள். கூட இருந்த தோழிகள், ‘‘தீபா, ஒரே நாளில் இத்தனை அழகாக பூ அடுக்கியிருக்கிறாயே. நாங்கள் சிறிது சிறிதாகத்தான் செய்யக் கற்றோம். உன் அப்பா சொல்வார் தீபா திறமைசாலியென்று. அது உண்மைதான்’’ என்று மனம் திறந்து பாராட்டினர். ‘‘இத்தனை நாள் நீ ஏன் வரவேயில்லை?’’ என்றனர். உண்மையிலேயே தீபா சந்தோஷமாகிவிட்டாள்.

கூடல் தொடங்கியது. அவள் யாவற்றையும் கவனமாகப் பார்த்தாள், கேட்டாள்.

ஓரிளம் பெண் அன்னையைத் தான் ஏற்றபின் தனக்கு நேர்ந்த அனுபவங்களை உருக்கமாக எடுத்துரைத்தாள்.

ஒரு பெரியவர் அன்னையின் கோட்பாடுகளை ஏற்பது அன்னையை ஏற்பதுஎன்றும், மனமாற்றம் பெரும்பலன் தரும் என்றும் கூறினார். அத்துடன் தீபாவிற்குத் தேவையான ஒன்றும் அந்தப் பேச்சில் இடம்பெற்றிருந்தது. அது பின்வருமாறு:

திட்டுஎன்பது அதிர்ஷ்டத்தின் டிரான்ஸ்பர் ஆர்டர், நம்மை யாரேனும் திட்டினால் நாம் திருப்பித் திட்டக் கூடாது. திட்டினால் அன்னை மையத்திலிருந்து வாழ்வு மையத்திற்கு வந்துவிடுகிறோம். அன்னை நமக்குத் தர வந்த அதிர்ஷ்டத்தை இழந்துவிடுவோம்.

திட்டினால் எப்படிக் கோபம் வாராமலிருக்கும்? எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்? பொறுமையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். திட்டினால் திருப்பித் திட்டுவேன் என்பதைத் தினமும் காண்கிறோம். இது சரியா? தவறா? என்பது கேள்வி இல்லை. இதுவே நம் நிலை.

(தீபாவிற்கு இதுவே தன்னிலைஎன்று தோன்றியது).

அன்பர் நிலை என்ன? திட்டினால் அவசியம் பொறுத்துக் கொள்ள வேண்டும். திரும்பத் திட்டக்கூடாது. மேலும் பிறர் நம்மைத் திட்டுவது நம்முள் உள்ள குறையின் பிரதிபலிப்பு. எனவே, அக்குறையைப் போக்க பிறர் நம்மைத் திட்டுவது ஒரு சந்தர்ப்பம். நாம் அதற்கு நன்றியுள்ளவராக இருக்க வேண்டும்.

ஒருவன் நம்மை வந்து திட்டினால், அவன் நம்மைத் திட்டியதாகப் புரிந்துகொள்கிறோம். நம்முள் உள்ள கெட்டகுணம் அழிய முடிவு செய்தபின், அது தானே அழிய முடியவில்லைஎன்பதால், அது அடுத்தவனை அணுகி அவன் கெட்டகுணத்தை (அதாவது திட்டும் குணத்தை அல்லது நம் குறையைச் சுட்டிக்காட்டும் குணத்தை) அசைத்து, என்னை வந்து திட்டுஎனக் கேட்டுக்கொள்கிறதுஎன்று நாம் புரிந்துகொள்வது இல்லை.



பிறர் நம் குறையைச் சுட்டும்போது எரிச்சல்படாமல் அதை ஏற்று, குறையை நிறைவாக மாற்றினால், நாம் அன்னையை நெருங்குகிறோம்என்று பொருள்.

இவ்வாறு சொற்பொழிவாளர் பேசியது அவளுக்கே பொருந்துவதாய் அமைந்தது. காலையிலிருந்து நிகழ்ந்தவற்றை எல்லாம் நினைவுகூர்ந்தாள். ஆம், பாட்டி இன்று என் குறையைச் சுட்டிக்காட்டிப் பேசினார். அது எனக்குத் திட்டியதாகப் புரிந்தது. ஆனால் இப்போது நானதை எப்படிப் புரிந்துகொள்ள வேண்டும்? சமையலைப்பற்றிய என் பிடிவாதம் தவறுஎன என் அடிமனம் உணர்ந்து, அது அழிய மறுத்ததால் பாட்டியின் கோபத்தை அசைத்து, என்னிடம் பேச வைத்தது. வீட்டிற்கு அடங்காத பிள்ளையை ஊரார் அடக்குவர்என்பது போலாயிற்று. அப்பா நயமாகச் சொன்ன போதெல்லாம் நான் அதை மதிக்கவில்லை. இன்று பாட்டியின் பேச்சு என் அகந்தையை தீண்டியது எனக்குப் பொறுக்கவில்லை. அதனால் அழுதுகொண்டு வந்துவிட்டேன். பாட்டி எனக்கு நல்லது செய்திருக்கிறார்என்பதை இச்சொற்பொழிவின் மூலம் அன்னை எனக்கு உணர்த்தினாரோ!

காலையிலிருந்த கோபம் சிறிது சிறிதாய்க் குறைந்து மறைந்துவிட்டது. முகம் மலர்ந்துவிட்டாள் தீபா. தோழிகள் வேறு அவளை மீண்டும் நாளை கூடலுக்கு வரவேண்டும்எனக் கூறி அன்புடன் வழியனுப்பினர்.

தீபாவைப் பற்றியிருந்த கெட்டகுணம் அவளைவிட்டு நீங்குவதற்குத்தான் அன்னை செய்த ஏற்பாடு இதுஎன்று ரெங்கா அன்னைக்கு மானசீகமாய் நன்றி செலுத்தினார்.

அன்று வீடு திரும்பிய பிறகு இரவெல்லாம் தியானக் கூடல் காட்சியும், பேச்சுமே தீபாவின் மனதில் மீண்டும் மீண்டும் வந்தன. இனிமையாய் உறங்கி விழித்தாள்.

தியானமையச் சூழல் அவளுள் ஒரு விழிப்பை ஏற்படுத்தி-யிருந்தது. ஓர் அருமையான சூழலுக்குள் வாராததால்தான் இத்தனை நாள் எப்படி வாழ்ந்திருக்கிறோம்என்று புரிந்தது. தன் அத்தனை பிழைகளையும் பொறுத்துக்கொண்டு தன்னைச் சுதந்திரமாய் விட்டிருக்கும் தந்தையின் அருமையும் புரிந்தது. பரிவும் எழுந்தது. வீட்டிற்கு அடங்காத பிள்ளையை ஊரார் அடக்குவர் என்பதுபோல் அப்பாவிடம் எதிர்த்து உரையாடும் தன்னை பாட்டி தன் பேச்சால் அடக்கிவிட்டார் என்றுணர்ந்தாள். ஆனால் கோபப்படவில்லை. பாட்டி தனக்கு அதிர்ஷ்டம்தர வந்தவர்என்று மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டாள்.

மறுநாள் காலை வழக்கம்போல் பால் காய்ச்சி, காபி போட சமையலறைக்கு வந்த ரெங்கா, சமையலறைக் கதவு திறந்திருப்பதும், விளக்கு எரிவதையும் கண்டு, முன்தினம் மறந்துவிட்டோமோஎன்று எண்ணியவண்ணம் உள்ளே வந்தவர், தீபா பால் காய்ச்சுவது கண்டு வியப்படைந்தார்.

''அப்பா, வாருங்கள். காபி தயார். உட்காருங்கள்'' என்று டபரா, டம்ளரில் பால் ஊற்றி, டிகாஷன் ஊற்றி, சர்க்கரை இட்டுக் கலக்கிக் கொடுத்தாள். சந்தோஷமாய் வாங்கிக் குடித்தார். தானும் ஒரு டம்ளரில் காபியுடன் வந்து அமர்ந்து, குடிக்க ஆரம்பித்தவள், முகம் சுருங்கி, ''காப்பி எப்படியிருக்கிறதப்பா?'' என்றாள். ''என் மகள் தயாரித்ததல்லவா? நன்றாகவே இருக்கிறது'' என்றார். ''போங்கப்பா, பொய் சொல்றீங்க. ஒரே தண்ணியாயிருக்கு. நான் பாலில் தண்ணீரும் ஊற்றவில்லை. நீங்கள் போடும் காப்பிபோல் இல்லையே, ஏன்?'' என்றாள்.

ரெங்கா சிரித்தார். பிறகு, ''காபி பௌடர் இன்னும் சிறிது கூடுதலாய்ப் போட வேண்டும். பிறகு காய்ச்சிய தண்ணீரை வேகமாக ஊற்றினால், பொடி கரைந்து தண்ணீர் டிகாஷன் வந்துவிடும். போட்ட காப்பிபொடி நனையும்படி சிறிது சிறிதாகக் கொதிக்கும் நீரை மெல்ல ஊற்ற வேண்டும். அப்போது பொடி கரையாமல் ஊறி,



கெட்டிப்படும். பிறகு டிகாஷன் திக்காக வரும்'' என்றார்.

''ஓ! இப்படி ஒரு சூட்சுமம் உள்ளதா இதில்? மாலையில் பாருங்கள், அருமையான காப்பி தருகிறேன்'' என்றாள். இப்படி ஒவ்வொன்றாய்க் கற்றுக் கொடுத்தார்.

வெண்டைக்காயைக் கழுவி, ஈரம் போகத் துடைக்காமல் அரிந்துவிட்டாள். ஒரே குழகுழப்பு. பொறியல் உதிர்உதிராக வரவில்லை.

''என்னப்பா இது?'' என்றாள்.

வெண்டைக்காயை ஈரத்துடன் அரியக்கூடாது என்று சொல்லிக் கொடுத்தார். ரசம் ஒரு கொதி வந்ததும் நிறுத்தி, நெய்யில் கடுகு தாளித்தால் வாசனையாக, சுவையாக இருக்கும்என்பது போன்ற சமையல் சூட்சுமங்கள் யாவும் நாலே நாட்களில் கற்றுவிட்டாள்.

ஐந்தாம் நாள் உற்சாகமாய்ப் பழைய தீபா ஆனாள். ''அப்பா, நானின்று சார் வீட்டு வேலைக்குப் போகப்போகிறேன்'' என்று புறப்பட்டாள்.

''சரிம்மா'' என்று மகிழ்வுடன் வழியனுப்பினார். நான்கு நாட்களில் வந்துவிடுவாள் என்று தான் தற்செயலாய்க் கூறியதை அன்னை அழகுற நிறைவேற்றியது கண்டு நன்றியால் சிலிர்த்தார்.

இவளைக் கண்டதும் சார் மகிழ்ந்துபோனார். ''தீபா, ஆர் யு ஆல்ரைட்?'' என்றார்.

''ஆமாம் சார், குணமாகிவிட்டேன்'' என்று வாய் கூறியபோது (உடம்பால் அன்று, மனத்தால் என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்).

அவள் உடல்நலமாகி வந்த முதல் நாள்என்று புதிய வேலை ஒன்றும் கொடுக்காமல், வெளியே போய்விட்டார்.

தன் ரூமைத் திறந்து, பொருட்களை ஒழுங்கு செய்துவிட்டு, ஈமெயில் செக் செய்து, அவசர கடிதங்களை அனுப்பிவிட்டு, டீ டைம்மில் சமையலறைக்கு வந்தாள். பாட்டி அன்று வீட்டில் சமைப்பதாக யாவரிடமும் கூறியிருந்ததால், சமையலறையில் தடுமாற்றத்துடன் ஏதோ செய்துகொண்டிருந்தாள்.

''பாட்டி, நான் தீபா வந்திருக்கிறேன்'' என்று நாடக பாணியில் பழைய உற்சாகத்துடன் பேசினாள்.

பாட்டிக்கு வியப்பு. "தீபாவா?" என்றார். அன்று பாட்டி தீபாவைப் பேசிவிட்டாளேதவிர, தீபா கோபித்துக்கொண்டு போனதால் தன்மீதுதான் தவறுஎன்று அச்சப்பட்டுக்கொண்டிருந்தார். இன்று அவள் குறும்புக் குரலைக் கேட்டதும் மகிழ்ச்சியுடன், "தீபா, பாட்டி மேல் உனக்கு வருத்தமொன்றில்லையல்லவா?" என்றார்.

"வருத்தமில்லை பாட்டி, சந்தோஷம். நன்றி சொல்லத்தான் வந்துவிட்டேன்" என்றாள். பாட்டிக்குப் புரியவில்லை.

"பாட்டி, இப்படி வந்து உட்காருங்கள். இன்று நான்தான் சமையல் செய்யப்போகிறேன்" என்று கூறியவண்ணம் பாட்டியை மெல்லப் பிடித்து, அழைத்து வந்து, டைனிங் டேபிள் முன்னுள்ள நாற்காலியில் உட்கார வைத்தாள்.

பாட்டிக்குத் திகைப்பு, சமையல் தெரியாதுஎன்று அழுது கொண்டு போனாளே.

அவள் மளமளவென்று கறிகாய்களை எடுத்து, அரிந்து வைத்துக் கொண்டு, அப்பாவிடம் கற்ற சுவையான சமையலை விரைவாகத் தயாரித்து, டைனிங்டேபிளில் வைத்தாள்.

"பாட்டி எனக்கொரு பிராமிஸ் செய்து கொடுங்கள்" என்றாள்.

"பிராமிஸா? எதற்கு?" என்றார் பாட்டி.

"ஆமாம் பாட்டி. நான் சமைத்தேனென்று யாரிடமும் சொல்லக் கூடாது. சாருக்குத் தெரிந்தால் கோபிப்பார்" என்றாள். பாட்டி சொல்லவில்லைஎன்று ஒப்புக்கொண்டார்.

கையோடு சாருக்கும் போன் செய்து, இன்று காரியர் சாப்பாடு எடுக்க வேண்டாம்என்று பாட்டி சொன்னதாகக் கூறிவிட்டாள்.

1 மணிக்கு சாப்பாட்டு அறையில் கூடிய வீட்டினர் மதிய உணவை இரசித்து, ருசித்துச் சாப்பிட்டனர். "பாட்டி, நம் சமையற்காரர் சமையலையும், ஹோட்டல் சாப்பாட்டையும் சாப்பிட்டு, இன்று உங்கள் சமையலைச் சாப்பிடுவது, வெயிலின் கொடுமையை நிழலின் அருமையில் உணர்வது போலிருக்கிறது. பாட்டி, உங்களுக்கு நிச்சயம் ஒரு பரிசு தர வேண்டும்.

ஏனப்பா, நாங்கள்தான் சமையல்காரர் சாப்பாட்டைச் சாப்பிட்டு வளர்ந்தோம். நீங்கள் எப்படி?" என்றனர்.

"குழந்தைப் பருவத்தில் அம்மாவின் கைச் சமையல்



சாப்பிட்டேன். திருமணத்திற்குப்பின் உன் அம்மாவின் சமையல் சில காலம் சாப்பிட்டேன். நீண்ட நாட்களாக சமையற்காரர் கையால் செய்த சாப்பாடுதான். நீண்ட நாட்களுக்குப் பிறகு அம்மாவின் கையால் சமைத்துச் சாப்பிடும் பேறு இன்றுதான் கிடைத்திருக்கிறது" என்றார்.

இவர்கள் இப்படிப் பேசப் பேச, பாட்டிக்கு, தான் தீபாவைப் பேசியது உறுத்தியது. இத்தனை நன்றாகச் சமைத்து, அனைவர் பாராட்டையும் பெறும் தகுதிக்குரியவள் தீபாதான். ஆனால் தான் சமைத்ததை வெளியிடக்கூடாதுஎன்று வாக்குறுதி வாங்கியிருக்கிறாளேஎன்று எண்ணியவண்ணமிருந்தார் பாட்டி.

"தீபா, இங்கே வா. நீ சாப்பிட்டுவிட்டாயா?" என்றார் சார்.

"இல்லை சார். ஒரு சின்ன வேலை பாக்கியிருந்தது. அதை முடித்துவிட்டுச் சாப்பிட நினைத்தேன்" என்றாள்.

"நல்லது. அதை முடித்துவிட்டு, இன்று ஒரு நாள் பாட்டியின் கைச் சமையலைச் சாப்பிடு. நாங்கள் எல்லோரும் அடைந்த சந்தோஷத்தை நீயும் அனுபவிக்க வேண்டாமா? யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று கூறிச் சிரித்தார்.

பாட்டிக்கு மிகவும் சங்கடமாயிருந்தது. தீபாவும் மனதிற்குள் சிரித்துக்கொண்டு, "சரி சார்" என்றாள்.

அதன்பிறகு சமையற்காரர் வரும்வரை தீபாதான் சமைத்தாள். யாருக்கும் தெரியாமல் பாட்டியை உடன் வைத்துக்கொண்டு சமைத்தாள்.

"பாட்டி, இனி சமையற்காரர் வந்த பிறகும் வாரத்தில் ஒரு நாளாவது உங்கள் சமையல்தான். அதுவும் உங்கள் வயோதிகத்தில் உங்களைச் சிரமப்படுத்தக்கூடாது என்பதால்தான்" என்றனர் பேரப்பிள்ளைகள்.

மறுநாள் மதிய சாப்பாடு முடிந்ததும் மூன்று பேரர்களும் பாட்டியை அழைத்து, "பாட்டி, கண்ணை மூடிக்கொள்ளுங்கள். கையைக் காட்டுங்கள்" என்றனர்.

பாட்டிக்கு ஒன்றும் விளங்கவில்லை. பாட்டியின் கண்ணை ஒரு பேரன் கையால் பொத்திக்கொள்ள, ஒரு பேரன் பாட்டியின் கையைப் பிடித்து, உள்ளங்கையை விரிக்க, ஒரு பேரன் அந்தக்

கையில் ஒரு சிறிய பேழையை வைத்தான்.

"பாட்டி கண்ணைத் திறந்து பாருங்கள்" என்று ஒரே குரலில் மூவரும் கூற, கண்ணைத் திறந்த பாட்டி, கையிலுள்ள சிறிய பெட்டியைப் பார்த்து, "என்ன இது?" என்றார்.

"திறந்து பாருங்கள்" என்றனர்.

திறந்தால், 2 பவுனில் ஒரு பொற்சங்கிலி. "இந்த வயதில் எனக்கெதற்கு சங்கிலி?" என்றார் பாட்டி.

"உங்கள் வயதிற்கில்லை பாட்டி. உங்கள் சமைக்கும் திறத்திற்கு" என்றான் ஒரு பேரன்.

"அதற்காகச் சொல்லவில்லை குழந்தைகளே, எனக்கு வயதாகிவிட்டது. நாளைக்கே நான் இறந்தால் இந்தச் சங்கிலிக்கு நீங்கள் மூன்று பேரும் போட்டியிட நேரும். உங்கள் ஒற்றுமை குறையும். அதற்காகத்தான் சொல்கிறேன்" என்றார் பாட்டி.

"நாங்கள் போட்டியிடமாட்டோம். இது உங்கள் உரிமை. உங்கள் விருப்பம் போல் நீங்கள் எதுவும் செய்யலாம்" என்றனர் மூவரும்.

"அம்மா, குழந்தைகள் உன் சமையலைப் பாராட்டிப் பரிசு கொடுக்கிறார்கள். நீ யாருக்கேனும் பரிசு கொடுக்க விரும்பினால் அது உன்னிஷ்டம்" என்றார் சார்.

உடனே பாட்டி, "தீபா இங்கே வா" என்றார். தன்னறையில் வேலையாயிருந்த தீபா பாட்டியின் அருகில் வந்தாள். "உண்மையில் இந்தப் பரிசுக்குரியவள் தீபாதான். அவள் சமைத்தாள்என்றால், நான் அவளை வேலை வாங்கியதாக உங்கள் அப்பா கோபித்துக் கொள்வார்என்று உண்மையைச் சொல்லாதிருந்தேன்" என்று கூறிய பாட்டி சங்கிலியை தீபாவிற்கு அணிவித்தாள்.

"அப்படியா? கடைசியில் என் பி.ஏ.வை நீ வேலை வாங்கிவிட்டாயா? சங்கிலி பரிசளித்ததால் போனால் போகிறதுஎன்று விட்டுவிட்டேன்" என்றார் சார் விளையாட்டாக. தீபாவின் திருவுருமாற்றம் அதிர்ஷ்டமாய் வெளிப்பட்டது.

*முற்றும்.*

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# நன்றியை எதிர்பார்ப்பது

நன்றி மறப்பது நன்றன்றுஎனக் கூறியவர் நன்றியைப்பற்றி 10 கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்.

❋ ***நன்றியை எதிர்பார்ப்பது தவறுஎன எவரும் கூறவில்லை.***

- ❑ கடலில் விழுந்து மூழ்குபவரைக் காப்பாற்றியவருக்கு பிழைத்தவர் நன்றி கூறவில்லை.
- ❑ இழந்த முதலை மீண்டும் பெற்றுக் கொடுத்தவர் நன்றி பெறவில்லை.
- ❑ அழிந்த வாழ்வை உயிர்ப்பித்துக் கொடுத்தவரைப் பிழைத்தவர், நீங்கள் ஒருவர் மட்டும் உதவ மறுக்கிறீர்கள் என்றார்.
- ❑ 30 ஆண்டு வருமானத்தை 1 ஆண்டில் பெற உதவியவருக்கு நன்றி கூறுவது தவறுஎன ஒருவர் நடந்து கொண்டார்.
- ❑ இழந்த சொத்தை சர்க்காரிடமிருந்து காப்பாற்றிக் கொடுத்தவர் சொத்தைப் பலன் பெற்றவர் நாணமின்றிக் கேட்டார்.
- ❑ வேலையைக் காப்பாற்றி, வாழ்க்கை தடம் மாறிப்போவதை தடுத்தவர் வேலையை அழிக்க ஒருவர் ஆர்வமாக நின்று வென்றார்.
- ❑ ரூ. 27,000, 81,000 ரூபாயானது என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி. நான் அதை அடிக்கடி பல்வேறு கோணத்தில் எழுதியுள்ளேன். இன்று நன்றியை எதிர்பார்த்தால் மனம் புண்படும்படிப் பேச்சு எழும்என்று எழுத விரும்புகிறேன்.

*12 மணிக்கு 27,000 ரூபாய்க்கு விலை முடிந்ததை*
*4 மணிக்கு 81,000 ரூபாய்க்கு விற்க உதவியவர்*

***நன்றியை எதிர்பார்ப்பது தவறா?***

*தவறுஎன அறிவுறுத்தி பெற்றவர்*

*உதவியவர் மனம் புண்படும்படிப் பேசினார்.*

❀ ❀ ❀

# ஆழ்ந்த முடிவு தன்னைத் தானே பூர்த்தி செய்து கொள்ளும்

ஓடிப்போன லிடியாவை *Pride and Prejudice*இல் டார்சி £ 5000 செலவு செய்து மீட்கிறான். கார்டினர், பென்னட்டின் மைத்துனர் பணத்தைக் கொடுக்க முன்வருகிறார். யார் பணம் செலவு செய்ததுஎன பென்னட்டிற்குத் தெரியாது. மைத்துனர் செய்ததாக நம்புகிறார். பென்னட் வருஷ வருமானம் £ 2000 பவுன். ஓடிய பெண்ணை மீட்டாயிற்று. பென்னட்டிற்கு இப்பணத்தை இப்பொழுது கொடுக்க முடியாது. அடுத்தவர் பாரத்தை ஏற்கவில்லையெனில் ஆபத்து. காரியம் முடிந்துவிட்டது. பொறுப்பு பென்னட்டுடையது. டார்சி விஷயம் பென்னட்டுக்கு வரவில்லை. மைத்துனர் எவ்வளவு பணம் செலவாயிற்றுஎனக் கூறவில்லை. அதைக் கேட்கவில்லை. என் தங்கை மகளுக்குச் செலவு செய்ய எனக்கு உரிமையுண்டு என சந்தோஷப்பட்டார்.

இந்நிலையில் பென்னட் பேசாமலிருக்கலாம், பணத்தைக் கொடுக்கிறேன் எனக் கூறலாம். அவர் ஒரு தீவிர முடிவு எடுத்தார்.

❋ *இது என் செலவு. நான் இதை ஏற்க வேண்டும்.*
*எவருக்கும் இப்பொறுப்பில்லைஎனத் தீர்மானம் செய்தார்.*

25 வருஷமாக £ 2000 வருஷ செலவு செய்கிறார். கை மீதியில்லை. இவருக்கு 50 வயது. சொத்து இவருடையதில்லை. அதன் மீது கடன் வாங்கும் உரிமையில்லை. கொடுப்பதாக முடிவு செய்தால் ஓரிரு ஆண்டில் முடியும். 5 ஆண்டில் கொடுப்பதானால் ஆண்டுக்கு £1000 மிச்சம் பிடிக்க வேண்டும். செலவைப் பாதியாக்க வேண்டும். இன்று மாதம் ரூ.50,000 செலவாகும் வீட்டில் 25,000 மிச்சம் பிடித்தால் எப்படியிருக்கும்? அது எளிய காரியமில்லை.

❋ அந்தப் பெரிய முடிவை ஆழமாகப் பென்னட் எடுத்தார்.

❋ ***அது அவர் மனத்தில் உண்மை.***

உண்மைக்கு சக்தியுண்டு. என்ன ஆயிற்று? விஷயம் வெளி வந்துவிட்டது. பணத்தை டார்சி கொடுத்துவிட்டார். அது பென்னட்டுக்குத் தெரியக்கூடாதுஎன்றார். பென்னட் பொறுப்பு டார்சியிடம் போய்விட்டது. டார்சி எலிசபெத்தை மணந்தார்.

❋ எப்படியோ காரியம் முடிந்தது, இனிக் கவலையில்லைஎன்ற பொறுப்பற்ற நோக்கத்திற்குப் பதிலாக,

❋ என் பொறுப்பை நான் அவசியம் ஏற்க வேண்டும்என்ற பொறுப்புணர்ச்சி செய்தவை இரு காரியங்கள்.

1. *இவர் பொறுப்பை டார்சி ஏற்றார்.*
2. *டார்சியே மருமகனாகிவிட்டார்.*

***முடிவு முழுமையானால் தானே தன்னைப் பூர்த்தி செய்யும், மேலும் ஒரு பலனும் வந்தது.***

❀ ❀ ❀

April 2010 Jiviyam 15 Malar 12
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| **அன்னையின் ஆன்மீகப்பரிசு** | ரூ.100/- |
| **லைப் டிவைன் - கருத்துகள்** | ரூ.100/- |
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம்** (பாகம் 2) | ரூ.250/- |
| **உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** | ரூ.100/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| **லைப் டிவைன் விரிவுரைகள்** | ரூ.100/- |
| *தமிழாக்கம்:* என். அசோகன் | |
| **SATYA JYOTHI** | ரூ.200/- |
| **(CONCISE TRUISMS)** | |
| **N.Asokan** | |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191